15 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாரணிக் கெல்லா மேடுத்தோதுவோமே”


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

Acc-No-10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 2-3-33

ரயில்வே சர்க்கஸ்



—Courtesy of Hindustan Times.

முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு வண்டிகளினின்று ரயில்வேக்கு வரும்படியோ குறைவு, நிர்வாகச் செலவோ அதிகம். ரயில்வே நிர்வாகம் நடப்பதற்குக் காரணமா யிருப்பவன் மூன்றாவது வகுப்புப் பிரயாணியே. ஆனால் அவனுக்குத் தான் சிரமங்கள் அதிகம். ரயில்வே நிர்வாகம் அவன் உடல் மேல் கால் வைத்து நின்று, முதல், இரண்டாவது வகுப்புகளைக் கைகளால் தாங்குகின்றது.

காங்கிரஸ் மாயுமா?

சுதந்திர மடைய விரும்பும் நாட்டுக்கு அடிக்கடி சோதனைகள் ஏற்படுவது சகஜமே. சோதனைகள் அதிகமாக ஆக, அவற்றில் ஈடுபடும் தியாகிகள் மிகுதியாக ஆக, அடக்கு முறை கரை புரண்டு ஓட ஓட, நாட்டின் விடுதலை நாளும் நெருங்கிக் கொண்டிருக்கும்; அடிமை இருளும் அகன்று கொண்டிருக்கும். இதுதான் சுதந்திரப் போரின் விதி ; எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் இந்த நியதி தான் நடைபெறறது. இன்று இந்தியாவிலும் அத்தகைய நியதிதான் நடை பெறுகின்றது.

பாரதமக்களுக்கு 'சுதந்திரம்' என்ற புனிதச் சொல்லைச் சொல்லிக் கொடுத்தது காங்கிரஸ் மகா சபை. சுயராஜ்யப் போரில் பல்லாயிரக் கணக்கான மக்களை ஈடு படுத்தியது காங்கிரஸ் தான். 'சர்ச்சில்' போன்ற இந்திய விரோதிகளை கனவிலும், நினைவிலும் கலங்குறச் செய்து கொண்டிருக்கும் மூல மந்திரம் காங்கிரஸே யாகும். அப்பேர்ப்பட்ட தேசிய மகா சபையை, காங்கிரஸ் பெருஞ் சபையை எந்தச் சக்தியாலும் இனி அழிக்க முடியா தென்பதை உலகம் அறிந்து கொள்ளட்டும்.ஏனெனில் அது ஒவ்வொரு இந்தியனின் இதயத்திலும் வாழத் தலைப்பட்டு விட்டதன்றோ?

* * * *

இந்த வருடம் காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தைக் கல்கத்தாவில் கூட்டுவதென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மூன்றாவது வட்ட மேஜையைப் பற்றியும், இனி வரப் போகும் வெள்ளைக் கடுதாசியைப் பற்றியும் ஆராய்ந்து அபிப்பிராயம் கூற வேண்டியது காங்கிரஸின் கடமையாகும். நாட்டை ஆட்சி புரியும் பிரிட்டிஷ் சர்க்காரும் காங்கிரஸின் அபிப்பிராயமென்ன வென்றறியக் காத்திருக்க வேண்டுவதும் நியாயமே! ஆனால் திடீரென்று சோதனை வந்திருக்கிறது. கல்கத்தா காங்கிரஸை அதிகாரிகள் தடுத்து விடப் போகிறார்களாம்!

வெள்ளைக் கடுதாசியைப் பற்றிக் காங்கிரஸ் மகா சபை கூறும் அபிப்பிராயத்தைக் கேட்பதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் நடுங்குகின்றார்களா என்ன?

“செவிகைப்ப சொற்பொறுக்கும் பண்புடை
வேந்தன் கவிகைக் கிழ் தங்கும் உலகு”

என்றார் வள்ளுவனார். தேச மக்களின் அபிப்பிராயத்தைக் காதால் கேட்பதற்குக் கூட பொறுமை யில்லாவிடின் அப்பேர்ப்பட்ட ஆட்சி முறை யிருந்தென்ன? போயென்ன? தற்காலத்தில் அமுலில் உள்ள அடக்கு முறை ஆட்சியின் உண்மை உருவத்தையே இந்தச் செய்கை விளக்குகின்றதன்றோ?

சின்னாட்களுக்கு முன்னே டெல்லி சர்க்கார் என்ன சொன்னார்கள் தெரியுமா? “சிறையிலுள்ள காந்தியை விடுதலை செய்வானேன்? வெளியேயுள்ள காங்கிரஸ் வாதிகள் சமரசம் பேசட்டுமே” என்று வில்லிங்டன் அரசு கூறிற்று. ஆனால் அதே வில்லிங்டனின் ஆட்சிதான் 'வெளியேயுள்ள காங்கிரஸ் வாதிகள்' கல்கத்தாவில் கூடுவதைத் தடுக்க இன்று முயற்சி செய்கின்றது. என்னே விபரீதம்!

காங்கிரஸ் சபையை இந்திய சர்க்கார் தடுப்பதாயின் அவர்கள் இந்தியப் பொதுஜன அபிப்பிராயத்தைத் துவைப்பதே நோக்கமாகக் கொண்டுளர் என்பதே முடிவு. ஆனால் ஒன்றை மட்டும் நினைப்பூட்ட விரும்புகிறோம். காங்கிரஸ் மகா சபையை இனி மாய்ப்பதென்பது முடியாத காரிய மென்பதை வில்லிங்டன் சர்க்காரும், சீமைக் கூட்டமும் உணர்ந்து கொள்ளுமாக!

வம்பர்கள் சூழ்ச்சி!

டெல்லி சட்ட சபையில் சென்ற திங்களன்று கயப் பிரஸாத சிங்கின் “தீண்டாமை விலக்கு மசோதா” ஆலோசனைக்கு வருவதாக இருந்தது. ஆனால் அது அன்றைக்கு விவாதத்துக்கு வராதவாறு சூழ்ச்சிக்காரர்கள் செய்து விட்டனர். அம்மசோதாவுக்கு முன்னால் வாதிக்கப்பட்ட விஷயங்களை வேணுமென்றே 'வள வள' வென்று பேசி நீட்டினார்கள். இன்னும் சிலர் பிரமாதமாக காங்கிரஸிடம் அநுதாபம் உடையவர்கள் போல நடித்து “கல்கத்தா காங்கிரஸைத் தடுப்பானேன்?” என்று வீண் கேள்விகளைக் கேட்டு பொழுது நஷ்டமாகுமாறு செய்தனர். ஆகவே அன்று தீண்டாமை விலக்கு மசோதா வரும் சமயத்தில் அன்றைய சபை முடிய வேண்டியதாயிற்று. இனி இம்மசோதா மார்ச்சு 24ம் தேதியன்றுதான் வாதத்துக்கு வர வேண்டும். இம்மசோதாவை ஒத்தி வைக்க வேண்டு மென்ற நோக்கத்தோடு அன்று வாயாடி வம்பர்கள் செய்த சூழ்ச்சிக்கு இடங்கொடுத்த தேசத்துக்கு விரோதமான இந்தச் சபை இருந்தென்ன போயென்ன?

பாத்ரோ தலைக் கிறுக்கு

பரசுராம பாத்ரோ என்பவர் சென்னையின் மாஜி மந்திரி. சர்க்காரின் செல்லப் பிள்ளைகளில் அவரும் ஒருவர். அவரை வட்ட மேஜைகளுக்கு சர்க்கார் அழைத்துச் சென்றனர். இரண்டாவது வட்ட மேஜையில் இந்த ஜீவன் இருந்த இடத்தை விளக்குப் போட்டுப் பார்க்க வேண்டி யிருந்தது. இந்த மாதிரி இரண்டாவது வட்ட மேஜையில் அநேகர் மௌனம் சாதித்ததற்கு என்ன காரணம் என்பதை விவரிக்க வேண்டாம். மூன்றாவது வட்ட மேஜையில் இந்த பாத்ரோ வாயைத் திறந்து சில வசனங்களை உதிர்த்து விட்டுத் திரும்பினார்.

சென்னைக்கு வந்தவுடன் அங்கு மிங்கும் சந்து பொந்துகளைப் பார்த்து சில பொதுக் கூட்டங்கள் போட்டு வட்ட மேஜையில் தாம் கிழித்த கிழிப்புகளைப் பற்றி பிரசங்கங்கள் செய்தார். சென்னையில் தமது பாச்சா பலிக்காதது கண்டு இந்தப் பேர்வழி பர்ஹாம்பூர் போன்ற சில்லரை ஊர்களில் போய் வாய் சவடால் அடிக்க ஆரம்பித்திருக்கிறார்.

"இந்தியாவில் ஜனநாயக ஆட்சி யென்பது ஒரு பகற் கனவே. எத்தகைய திரைத்தன மேற்பட்டாலும் அதை ஏதாவதொரு கட்சி தோன்றி கவிழ்த்து விடும். மேலும் நாட்டுப் புறத்து இந்தியர்களோ அறியாமை மிகுந்தவர்கள்; படிப்பற்றவர்கள்; ஒற்றுமை யில்லாதவர்கள். இந்த நாட்டில் ஜன நாயக ஆட்சி நடக்குமா?" என்று கேட்டிருக்கிறார்.

இந்தப் பாத்ரோ போன்ற 'எட்டேகால்' லக்ஷணங்கள் இருப்பதால் தான் இந்திய ராஜீயம் குட்டிச் சுவராய்க் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷார் ஏற்படுத்தப் போகும் கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டியில் பாத்ரோவுக்கு இடம் வேண்டுமென்று ஆசை யிருக்குமானால் டெல்லி தேவதைகளின் முன்பு போய் ஆயிரம் தடவை சரணாகதி செய்து கொள்ளட்டும்; அதனால் நமக்குக் கவலை யில்லை. ஆனால் இந்திய மக்களை வாயில் வந்தபடி தூஷிப்பதற்கு இவர் யார்? இவருக்கு இந்தியா பிடிக்கவில்லையானால் சீமையில் சர்ச்சில் வீட்டுக்கு அடுத்த வீட்டில் போய் குடியிருந்து கொள்ளட்டுமே! ஏன் இந்த நாட்டில் பிறந்து இந்த நாட்டில் இருந்து கொண்டு இந்த நாட்டு மக்களை இவர் தூஷிக்க வேண்டும்?

நமது குறிப்புகள்

ஐயோ! ஜாதிப் பித்தர்களே!

அன்றொரு நாள் டில்லி சட்ட சபையில் ஜாதிப் பித்தம் வழிந் தோடியது. அந்தப் பித்தம் தலைக்கேறி, அதன் அங்கத்தினர்கள் தங்கள் மூளையில் ஒரு திருகாணியை இழந்து கூத்தாடினார்கள். ரயில்வே உத்யோகங்கள் சம்பந்தமாகவே இந்த ஜாதிக் கிறுக்கு ஏற்பட்டது. ஹிந்து முஸ்லீம் என்ற மாத்ஸர்ய உணர்ச்சிகள் சற்று நேரத்திற்குச் சபையில் தாண்டவமாடின.

ஜாதி வீதா சாரப்படி உத்தியோகங்களைப் பாகம் போட்டுத் தர வேண்டுமென ஒட்டாவா வீரர் ராமசாமி முதலியாரின் மூளை ஒரு யோசனையையும் தள்ளியது. இந்த ஜாதிப் பித்தமே நாட்டை அதன் லக்ஷியத்தினின்றும் வெகு தூரத்திற்கு இழுத்துக் கொண்டு போகின்றதென்பதை நாட்டுப் பெரியார்கள் பலர் எவ்வளவோ தடவை அடித் தடித்துச் சொல்லி வந்தாலும் அது இந்த எம். எல். ஏ க்களின் மூளையில் தைப்பது கிடையாது. அல்லது வேண்டுமென்றே அவர்கள் சர்க்காரின் மாய வலையில் சிக்கி இப்படி ஆடுகின்றார்களா?

இப்படி ஆடினால் தான் 'திவான் பகதூர்கள்' 'ஸர்' ஆகவும், ஸர்கள் 'நைட்'களாகவும் ஆகலாமென்பது அவர்கள் எண்ணம் போலும்! இவர்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கு அக்கரையில்லை. ஆனால் ஜாதி ஜாதி என்று சொல்லிக் கொண்டு அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பதைத் தான் நாம் கண்டிக்க வேண்டி யிருக்கிறது.

வட மதுரை வழக்கு

மத்ரா என்ற வட மதுரையில் ஜனவரி 4-ம் தேதி காந்தி தினமாகக் கொண்டாடப்பட்ட போது கதவைச் சாத்தி ஹர்த்தால் செய்தாரென்று கதர் கடைக்காரர் மீது போலீசார் வழக்குத் தொடர்ந்தார்கள். மாஜிஸ்திரேட் ஒருவருக்கு 200 ரூபா அபராதமென்றும், இன்னொருவருக்கு பத்து வார தண்டனை என்றும் தீர்ப்பளித்தார். வழக்கு மேல் கோர்ட்டில் விசாரணையானபோது அவர்கள் குற்றவாளிகளல்லரென்று விடுவிக்கப்பட்டனர். அதிக ப்ரசங்கித்தனமாக நடந்து கொள்ளும் சுபாவமுடைய சில போலீசாரும், மாஜிஸ்திரேட்டுகளும் இதைக் கவனிப்பாராக!

துண்டு தணுக்குகள்

தங்க முட்டைக் கோழிகள்

வறுமைத் துயர் தாள மாட்டாமல் அங்குமிங்கும் சில மிராசுதார்கள் திடீர் திடீரென உயிர் விட்டு விடுவதாகவும் கேள்விப்படுகிறோம். இந்த மாதிரி சம்பவங்களை யெல்லாம் ஜில்லா கலெக்டர்கள் சர்க்காருக்கு அனுப்புகிறார்களா வென்பது சந்தேகம். நிற்க,

"தங்க முட்டையிடும் கோழி போன்று இந்த நாட்டில் விவசாயி இருக்கின்றான். அவன் மீது வரிச் சுமையை மேலும் மேலும் சுமத்துவது தங்க முட்டை யிடும் கோழியைக் கொன்று விடுவதே போலாம்" என்று சென்னைச் சட்ட சபையில் ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்.

இந்தப் பசலி கிஸ்தி வசூலின் பயனாக மிராசுதார்கள் என்ற தங்க முட்டைக் கோழிகள் சாகாவிடினும் இனி மலட்டுக் கோழிகளாக ஆகப்போகின்றன என்பது மட்டும் நிச்சயம்.

குடியானவர் ஊர்வலங்கள்

ஆந்திர தேசத்தில் கிராமங்கள் தோறும் குடியானவர் ஊர்வலங்கள் நடப்பதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமையான வறுமை நிலைமையை உலகோர் அறிய வேண்டு மென்பதற்காக இத்தகைய ஊர்வலங்களை தெலுங்கர்கள் நடத்தப் போகின்றனர். ஆந்திர நாட்டுத் தரித்திர நிலைக்கு தமிழ் நாட்டுத் தரித்திர நிலை சப்பை யில்லை. ஆகவே தமிழ் நாட்டிலும் தரித்திர நாராயண ஊர்வலங்களை நடத்தி தங்கள் வறுமை நிலைமையை உலகுக்கு நம்மவர் காட்டிக் கொள்ளலாமா?

மாலை யணிந்ததன் பயன்

பெங்களூர் ஜில்லா மாஜிஸ்திரேட் முன்பு ஓர் விரோத வழக்கு நடை பெற்று வருகிறது. 'காடு கரியன ஹள்ளி' என்ற கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் தெய்வத்தை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் போது கழுத்தில் புஷ்ப மாலைகளை யணிந்து கொண்டு சென்றார்களாம். அவ்வாறு 'தாழ்த்தப்பட்ட மக்கள்' மாலை யணிந்து செல்வது மேல் ஜாதியார்களுக்கு அவமானமா யிருந்ததாம். ஆகவே ஆக்ஷேபித்தார்களாம். பிறகு நீல மங்களம் மாஜிஸ்திரேட் 144 சட்டத்தைப் போட்டு 'மாலை யணிந்து கொண்டு ஊர்வலம் போகக் கூடாது' என்று தடுத்து விட்டாராம். அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டி வழக்கு தொடரப் பட்டிருக்கிறது!

வெள்ளைக் கடுதாசி சூழ்ச்சி

சீமையிலிருந்து ஏதோ 'வெள்ளைக் கடுதாசி' வரப் போவதாகச் சொல்கிறார்களே, அந்தக் கடுதாசியின் யோக்யதை எப்படி யிருக்குமென்பதைக் காட்ட ஒரு குட்டு வெளிப்பட்டிருக்கிறது. அப்போது இந்தியாவுக்கு இரண்டு சட்ட சபைகள் உண்டாம். கீழ்ச் சபையில் 375 பேரும் மேல் சபையில் 150 பேருமிருப்பார்களாம். அவைகளில் சுதேச சமஸ்தானங்களுக்கு எவ்வளவு ஸ்தானங்கள் கொடுக்கப்படு மென்பதைப்பற்றி ஓர் வதந்தி புறப்பட்டுளது. கீழ்ச் சபையில் 125 பேரும், மேல் சபையில் 60 பேரும் சமஸ்தானங்களினின்று வரக் கூடும். 'சுதேச சமஸ்தானங்களின் போக்கைப்பற்றி சொல்லத் தேவை யில்லை. பிரிட்டிஷாருக்குச் சாதகமாகவும், தேசத்துக்கு இடைஞ்சலாகவும் காரியங்களைச் செய்ய சுதேச சமஸ்தானங்கள் தயங்க மாட்டா. அப்பேர்ப்பட்ட ஓர் கூட்டத்துக்கு அகில இந்திய சபைகளில் ஏராளமான பிரதிநிதித்துவத்தைக் கொடுப்பது, 'வெள்ளைக் கடுதாசி' சூழ்ச்சி யென்றே நமக்குத் தோன்றுகிறது.

36,000 வருஷமாகுமா?

ரயில்வே உத்தியோகங்களை இந்தியர் மயமாக்கவேண்டும் என்ற கூக்குரல் பலமாயிருக்கிறது. ஆனால் செய்கையில் எப்படி நடக்கிறது தெரியுமா? ரயில்வே உத்தியோகங்களில் இருந்த ஐரோப்பியர்களின் தொகையும், ஆங்கிலோ இந்தியர் தொகையும் 18,064 லிருந்து 18060 ஆக ஆயிருக்கிறது. இந்த எட்டு வருஷ காலத்தில் குறைந்தவர்கள் நான்கே. அத்தனை உத்தியோகங்களும் இந்திய மயமாக வேண்டுமானால் 36 ஆயிரம் வருஷம் ஆகுமென்று கணக்குப் போடலாம்!

புகையிலை 'லைசென்ஸ்'

புகையிலை விற்பவர்கள் 2½ ரூபாய்க்கு ஒரு லைசென்ஸ் வாங்கிக் கொண்டு விற்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் பம்பாய்ச் சட்ட சபையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. "சுருட்டுப் பிடித்துக் கொண்டு ஷோக்கா யிருக்கிறவன் மீது கொஞ்சம் வரி போடுவதால் என்ன தப்பு?" என்று ரெஜினல்ட் ஸ்பென்ஸ் பேசினார். புகையிலைப் பழக்கத்தை ஓர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இந்தச் சட்டம் உபயோகமாயிருக்கு மென இன்னொருவர் கூறினார். இந்த லைசென்ஸ் மசோதாவின் முடிவு யாதாகும்?

அஹம்பாவம் அழிய வேண்டும்?

மனு தர்ம சாஸ்திரத்தைப் பற்றித் தாம் கொண்டுள்ள கருத்துக்களைத் தாக்கி வேதாந்த சாஸ்திரி ஒருவர் தமக்கு எழுதியதற்கு மகாத்மாஜி இவ்வாரத்திய "ஹரிஜனம்" பத்திரிகையில் பதில் தந்திருக்கிறார். அவர் குறிப்பிடுவதாவது :—

மதத்தைப் பற்றி மனு தர்ம சாஸ்திரம் பின் வருமாறு கூறுகின்றது:

"பண்டிதர்களும், சற்குண சம்பன்னர்களும், கோபத்தை வென்றவர்களும், பற்றற்றவர்களும் எவ்வழியைப் பின்பற்றிச் செல்கின்றனரோ, ஹிருதயத்தில் எந்த விதமான அனுபவம் ஏற்படுகின்றதோ அதை மதம் என அறிந்து கொள்."

"லக்ஷியங்களை விடாதிருத்தல், மன உறுதி, மன்னிக்கும் சுபாவம், நாவடக்கம், புலனடக்கம், களவாடா திருத்தல், ஞானம், வித்வத்துவம், ஸத்தியம், கோபத்தினின்றும் விடுபட்ட நிலைமை, இவை தான் மதத்தின் முக்கிய கோட்பாடுகள்."

ஆகவே இக் கோட்பாடுகளுக்குப் புறம்பான கருத்துக்கள் இருந்தால் அவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை யென்றே சொல்லலாம். ஆகையால் அவற்றைத் தள்ளி விட வேண்டியது தான். ஆதி மனு தர்மத்தில் அவை காணப்பட வில்லை.

மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் காட்டப்படுவதை ஒழிக்காமல் மனு தர்மம் என்னமாக நியாயத்தைப் பற்றிப் பேச முடியும்? நாம் தற்போது காணும் எண்ணிறந்த ஜாதிகளுக்கு ஸ்மிருதிகளில் எவ்வித அதிகாரமும் காணோம். நான் எந்த மரத்தினடியில் உட்கார்ந்து இதை எழுதுகின்றேனோ, அந்த மரத்தில் எத்தனை இலைகள் இருக்கின்றனவோ அத்தனை ஜாதிகள் பிராம்மண ஸமூகத்திலிருக்கின்றன. மேலும் ஒரு சில ஜாதியினரைக் கொடுமையாக நடத்த வேண்டுமென்றும் ஸ்மிருதிகள் கூற வில்லை.

பிராம்மணன் தான் தன்னை உயர்ந்தவனாகக் கருதும் எண்ணங்களை விட்டொழிக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன். பிராம்மணன் ஹரிஜனனாக, அதாவது தேவ தாஸனாக மாற வேண்டும். அப்பொழுது தான், அவன் வர்ணாசிரம தர்மத்தையும், உண்மையான ஹிந்து மதத்தையும் நிலை நாட்ட முடியும்.

காந்தியும் ஸைகிள் ஸவாரியும்

ராஜீயத்தைப் பற்றிப் பேசவே கூடாதென்று எவ்வளவுக் கெவ்வளவு அழுத்தமாக மகாத்மாஜியின் வாய் கட்டப்பட்டிருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அவரது இதர அனுபவங்களை யெல்லாம் உலகம் தாராளமாக அறிந்து கொள்ள இடமேற்பட்டுளது. கடைசியாக அவரைப் பற்றிக் கிடைத்துள்ள செய்தியில் காந்திஜி தாம் சின்னப் பையனா யிருந்தபோது ஸைகிள் மீதேறி உல்லாசமாக ரவுண்டடித்த கதையை நாம் அறிகிறோம்.

எரிக்கும் வெயில். அந்த வேளையில் ஒரு பத்திரிகா நிருபர் ஸைகிளில் ஏறிக்கொண்டு ஏரவாடாவுக்குச் சென்றார். மகாத்மாவைக் கண்டார். "காந்திஜி! அப்பாடா என்ன சிரமம் தெரியுமா?" என்றார். "என்ன சமாச்சாரம்?" என்று பொக்கை வாய்க் கிழவர் கேட்டார்.

"அப்பா, இந்த வெயில்லே, யாராலே 'பெடல்' பண்ண முடிகிறது, காலெல்லாம் போய் விட்டது" என்றார் நிருபர்.

உடனே மகாத்மா தமது ஸைகிள் அனுபவத்தை ஆரம்பித்தார்: "நான் சின்னப் பையனாயிருக்கையில் வெயிலில் ஸைகிள் சவாரி செய்வதில் எனக்கு ரொம்ப குஷி. திறந்த வெளிகளில், ஸைகிளில் வேகமாகச் செல்கையில், வெயில் எவ்வளவு கடுமையாக யிருந்தாலும் சரி, வேகத்தால் ஏராளமான காற்று வீசுகின்றது; இது ரொம்ப சுகமானது. மேலும் 'பெடல்' பண்ணுவதால் ஸ்வாசம் நன்கு உள்ளுக்கு இழுத்து விடப்படுகின்றது. இதனால் உங்கள் காற்றுப் பைகளில் சுத்தக் காற்று நிறைந்திருக்கின்றது.

"என்ன, கல்லைத் தின்று ஜீரணிக்கக் கூடிய வயது. என்னமோ ஸைகிளுக்கு இப்படிப் பயந்து சாகின்றீரே! எனது சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். ஸைகிள் ஸவாரி உடம்புக்கு ரொம்ப நல்லது. ஸபர்மதி ஆசிரமத்திலும், தென்னாப்பிரிக்காவிலும் மண்டை வெடிக்கும் வெயிலில் நின்று கொண்டு நான் வேலை செய்திருக்கிறேன். ரொம்ப மோடாயிருந்தால், கீழே இறங்கிக் கொஞ்ச தூரத்திற்கு நடந்தால் சரியாய்ப் போய் விடுகிறது."

என்று சொல்லி காந்திஜி நிருபரைத் தட்டிக் கொடுத்தாராம்.

அணுவசக்தி யோகம்

(தபாற்கூலி உள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்)

ஸனாதனிகள் செய்ததென்ன?

ஸனாதனிகள் தீண்டத் தகாதவர்களைப் பகைப்பதில்லை யென்றும், படித்தவர்கள் தான் அவர்களைத் தாழ்வாக நடத்துகிறார்கள் என்றும் ஒரு பண்டிதர் நமக்கு எழுதி யிருப்பதற்கு மகாத்மா கீழ்க் கண்டவாறு பதிலளித்துள்ளார் :—

"ஹரி ஜனங்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுகிறவர்கள் படித்த சீர்திருத்தக்காரர்கள் தான் என்பதை அனுபவம் காட்டுகின்றது. ஹரி ஜனங்களுக்காக ஸனாதனிகள் இதுவரை எவ்வெவ் விதத்தில் பாடுபட்டிருக்கின்றனர், என்ன தர்மங்கள் செய்திருக்கின்றனர். என்ற விவரங்களை அறிவித்தால் அவற்றை நான் பத்திரிகைகளில் வெளியிடவும் தயார்."

* * * *

"கோயில் பிரவேச விஷயத்தில் வெகு ஜன வாக்கு என்பதைப் பற்றி என்னிடம் பேசிய ஒரு பண்டிதர் தவறான எண்ணங் கொண்டிருக்கிறார். கோயில் பக்தர்களுக்குத் தங்களுடன் சரிசமமாக யாரையும் ஸ்வாமி தரிசனத்திற்கு அழைத்துக் கொள்ள உரிமை யுண்டு. மகா ஜனங்கள் ஒன்று கூடி கோயில் விஷயங்களையும், கோயிலுக்குள் யாரை அனுமதிக்கலாம் என்ற விஷயத்தையும் பற்றி முடிவு செய்வது இந்தியாவின் நீண்ட கால வழக்கமாக விருந்து வருவதை அவர் அறியாரா?"

இன்னமும் பித்தமா?

காந்திஜி, ராஜாஜி ரங்கய்யர் முதலியவர்கள் ஆலயப் பிரவேச மசோதாவைப் பற்றிப் பேசுவதைத் தடுக்க வேண்டு மென்று பம்பாயில் ஒருவர் வழக்குத் தொடுத்திருக்கிறாரெனக் கேள்விப் பட்டோமே, அவரைப் பற்றிய சில விவரங்கள் கிடைத்துள. போன வருஷத்தில் இதே 'ஹாகேர்' என்பவர் பம்பாய் போலீஸ் கமிஷனர் மீது ஓர் வழக்குத் தொடுத்தாராம். சுத்த உபயோகமற்ற வழக்கு என்று மாஜிஸ்திரேட் அதைத் தள்ளி விட்டாராம். பிறகு அதே 'ஹாகேர்' தம்மைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டு மென்று மாஜிஸ்திரேட்டிடம் சொன்னாராம். டாக்டர்கள் "மூளை புரளவில்லை" என்று சொல்லியதால் அவருக்கு அங்கு வாழ சந்தர்ப்பம் கிடைக்க வில்லையாம். 'நேஷனல் கால்' பத்திரிகை இந்தக் கதையை வெளியிட்டிருக்கிறது.

மாமரத்தடியில் மகான்!

ஏரவாடா சிறையிலுள்ள அந்த மாமரம் செய்த பாக்கியம் தானென்ன! உலகின் ஓர் பெரிய மகானுக்கு நிழல் தந்து கொண்டிருக்கும் அந்த மாமரம் இப்போது வெகு அழகாகவும் இருக்கின்றதாம். கொத்துக் கொத்தாய் அபாரமாக அது இந்த வருஷம் பூத்திருக்கிறதாம். அந்தப் 'புஷ்பப் பந்த'லின் நிழலில், ஹரி ஜனங்களைக் கடையேற்ற வந்துள்ள அவதார புருஷன், தமது சகாக்களோடு உழைத்துக் கொண்டிருக்கிறார். ஒரு சிறிய காற்று மரத்தில் வந்து மோதினால் உடனே பொல பொலவென்று சின்னச் சின்ன புஷ்பங்கள் மகாத்மாஜியின்மீது விழுகின்றனவாம். 'இயற்கையன்னை தனது அருமை மகனுக்கு ஆசி கூறுவதே போல அப் புஷ்பங்கள் உதிர்கின்றன' என்று கவிவாணர் இக்காட்சியைக் கண்டு பாடிவிடுவார்கள். ஆனால் இந்தப் புஷ்பங்கள் சம்பந்தமாக ஒருநாள் காந்திஜி என்ன கூறினாராம் தெரியுமா? "இந்த மரத்தின் புஷ்பங்கள் காய்த்துப் பழுத்தவுடன் இதன் பழங்களை சாப்பிடலாம்" என்று தோழர்களிடம் சொன்னாராம். புத்த சரிதத்தில் மகாபோதி மரம் புகழ் பெற்றிருப்பதைப் போல காந்திஜியின் சரித்திரத்தில் இந்த மாமரம் ஓர் இடம் பெற்று விடலாமென்றே தோன்றுகின்றது. வாழ்க மாமரத்தடி மகா முனி!

ஸினிமாவை அறியேன்

"நான் எப்போதும் ஸினிமாவுக்குப் போனதில்லை. ஆகவே அதைப் பற்றி யான் ஏதுமறியேன்" என்று காந்திஜி நாகபுரியிலுள்ள நண்பரொருவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். 'ஸினிமா பார்ப்பதே மோக்ஷம்' என்று சதா கொட்டகை வாசலில் குந்திக் கிடக்கும் பித்தர்கள் இதைக் கவனிக்கவும்.

மலிவான விலை—மாய வலை!

(தாதாபாய் பேத்தியான மிஸஸ் காப்டென்)

மலை போன்ற எதிர்ப்பிற் கிடையே மகாத்மா கதரியக்கத்தை நாட்டில் தோற்றுவித்தார். ஹா! 12வருஷங்களுக்கு முன்பு இந்தக் கதரை ஏசினவர்கள் எத்தனை பேர்? மகாத்மாவைப் 'பித்தர்' என அழைத்தவர் எத்தனை பேர்? இப்படிச் சொன்னவர்களே இன்று அதன் அற்புதம் கண்டு வியந்து நிற்கின்றனர்.

இன்று கதர் 6½லட்சம் வயிற்றுக்குக் கஞ்சி வார்த்து வருகின்றது. வருஷா வருஷம் 19¼ லக்ஷம் ரூபாய் சம்பளம், கூலி இவற்றிற்காகச் செலவாகின்றது. இவ்வளவும் 12 வருஷங்களுக்குள்.

வெளி நாட்டுத் துணி இறக்குமதி முன்னை விட இப்பொழுது குறைந்திருப்பது போல் இதர பொருள்களின் வரத்தும் குறைந்து போய் விட்டது. சில புள்ளி விவரங்களைப் பாருங்கள்.

	1926-27ல் இறக்குமதி	1931-32ல் இறக்குமதி
சர்க்கரை ரூ.	18 கோடியே 89 லக்ஷம்	ரூ. 6 கோடியே 16 லட்சம் தான்
ஸோப்புகள் ரூ.	1 கோடியே 52 லக்ஷம்	ரூ. 88லக்ஷத்து 72ஆயிரம்தான்
தீப்பெட்டிகள் ரூ.	65 லக்ஷம்	ரூ. 1லக்ஷத்து 5 ஆயிரம்

1926-27-ல் இந்தியா 4 லக்ஷத்து ஏழாயிரம் டன்கள் எடை கொண்ட சிமிட்டியே உற்பத்தி செய்தது; ஆனல் 1931-32-லோ 5 லக்ஷத்து 92 ஆயிரம் டன் நிறை கொண்ட இந்தியச் சிமிட்டு தயாரிக்கப்பட்டுளது.

ஒரு விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தியக் கைத்தொழில்களை நசுக்குவதற்காக அன்னிய நாட்டினர் தங்கள் சரக்குகளை மிகவும் மலிவாக இங்கு கொண்டு வந்து தள்ளுகிறார்கள். இந்த மலிவைப் பார்த்து நாம் அவற்றை வாங்கி விடுகிறோம். நம் தொழில்களும் நாசமாகின்றன. பிறகு அன்னியச் சரக்குகளின் விலை கப கபவென்று ஏறி விடுகின்றது. நாம் இந்த மாய வலையில் சிக்குதல் கூடாது."

—கும்பகோணம் ஸ்வதேசிக் காட்சி பிரஸங்கம்

இந்தியாவின் அறிவு

"பௌதிக சாஸ்திரத்தையே நான் கரைத்துக் குடித்திருக்கிறேன். உலகிலுள்ள சகல தேசங்களின் விஞ்ஞான சாஸ்திரத் திறமையையும் நான் அறிவேன். இந்தச் சாஸ்திரத்தை உலகிற் களித்தது இந்தியா தேசமே என்று நான் சொல்வேன். மற்ற பொருள்களின் விஷயம் எப்படி யிருப்பினும் இரும்பைத் தயாரிக்கும் திறமையில் இந்தியாவிற்கு இணையான தேசம் கிடையாது என்பது எனது அநுபவம். இதற்கு அத்தாக்ஷி வேண்டுமா? டில்லிக்குச் செல்லுங்கள்; அங்கு 'குடுப் மினர்' அருகிலுள்ள இரும்புத் தூணைப் பாருங்கள். ஒருவரா, இருவரா, ஆயிரக் கணக்கான ஐரோப்பிய விஞ்ஞானிகள் அதனைப் பரீக்ஷை செய்து பார்த்தனர். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அதிலிருந்து கொஞ்சம் பாகம் சீமை ஸயன்ஸ் கல்லூரியின் ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டது. அந்தத் தூணை வைத்து இன்று 1400 வருஷங்களாகி விட்ட போதிலும், அந்த இரும்புத்தூணில் துளித் துரு கூடக் கிடையாது. ஏன்? அவ்வளவு சுத்தமான இரும்பு அது. அத்தகைய இரும்பை இன்று உலகில் காணவே முடிய வில்லை. ஐயோ! இந்தியாவின் கலைகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டனவே!"—ஆச்சாரியா ரே.

கெட்டுப் போன பட்டணம்

கிராமத்தில் கடன் பட்டு காவடியானவன், நவநாகரிகத் தளுக்கன், அனைவரும் பட்டண வாசங்களில் கும்பல் கூட ஆரம்பித்து விட்டனர். கிராமங்கள் நாசமாகிக் கொண்டே வருகின்றன. பட்டணங்கள் பெருத்துக் கொண்டே போகின்றன. சென்னை மாகாணத்தில் 1000க்கு 136 பேர் பட்டண வாசிகளென்று ஜன கணிதி சொல்கின்றது. பட்டண வாசத்தின் அசங்கியத்துக்கு ஒரு குறிப்பு வேண்டுமா? சராசரியாக ஒவ்வொரு வீட்டுக்கும் எட்டு மனிதர் வீதம் வசிப்பதாகக் கணக்கு கிடைத்துளது. சராசரிக் கணக்கே 'எட்டு' என்றால் கேட்க வேண்டுமா? சில வீடுகளுக்கு 'ஸ்டோர்' என்றும் பெயர்.

நமது கிளிஞ்சல் குவியல்

திருமங்கலத்தில் எட்டு தொண்டர்களுக்கு, மாஜிஸ்திரேட், வக்கீல், வாதி, பிரதிவாதி முதலியவர்களைப் போல் வேஷம் பூண்டு, தாலுக்கா ஆபீஸில் நுழைந்து அமுல் நடத்தியதற்காக தலா 6 மாதம் தண்டனை.

திருநெல்வேலி சுப்பய்யா பிள்ளைக்கு துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக 6 மாதம்.

கான்பூரில் குரு என்பவரின் அபராதத்துக்காக அவரால் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடத்திலுள்ள ஹோட்டல் சாமான்களை போலீசார் கைப்பற்றினராம்.

ஆமதாபாத்தில் கள்ளுக் கடை ஏல மறியல் சம்பந்தமாக போலீசார் 50 பேர் வரையில் கைது செய்து, முகாமையும் கலைத்து, துண்டுப் பிரசுரங்களையும் கைப்பற்றினர்.

பம்பாயில் போலீசாரிடம் வந்து ரிபோர்ட்டு செய்யத் தவறியதற்காக ஒருவருக்கு 1 வருஷமும், 100 ரூபா அபராதமும்.

கள்ளிக்கோட்டையில் விவசாயிகள் தினத்தைக் கொண்டாடியதற்காக 36 பேரை கைது செய்து பின்னர் 9 பேரை விட்டு விட்டனர்.

'நாமக்கல்' என்ற ஊரில் அநேக விதமான படங்களோடு காங்கிரஸ் விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தனவாம் "தேவை. தேவை. வில்லிங்டனின் அவசரச் சட்ட சினிமாவில் இரண்டாம் பகுதியில் ஆக்டு செய்ய தொண்டர்கள் தேவை" என்பன போன்ற விநோத விளம்பரங்களும் காணப் பட்டனவாம்.

1932ம் வருஷத்தில் சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக சென்னை மாகாணத்தில் மட்டும் தண்டிக்கப் பட்டவர்கள் தொகை 3152. அது சம்பந்தமாக ஜனவரி மாதக் கடைசியில் சிறையிலிருந்த ஆண்கள் 963 ; பெண்கள் 88.

பம்பாயில் மாதாந்திர கொடி விழா நடந்த போது அவசர சபைத் தலைவரும், காரியதரிசிகளும் உள்பட ஏழுபேர் கைதியாயினர்.

பெஷாவரில் தலைவர் அப்துல் மலிக் என்பவருக்கு இடம் கொடுத்ததற்காக சையது ஆலத்திற்கு 9 மாதமும், 2000 ரூ. அபராதமும்.

அலகாபாத்தில் விதேசி ஜவுளிக் கடை மறியல் செய்ததற்காக 8 பேர் கைதியாயினர்.

குண்டூர் ஜில்லாவில் ஒரு கிராமத்தில் ஒரு கோவில், சென்னைக்கருகில் புளியார்மலாவில் ஒரு கோவில், குஜராத்தில் தோஹாத் என்னுமிடத்தில் ஒரு கோவில், பாராபங்கி ஜில்லாவில் மூன்று கோவில்கள், ரத்தினகிரியில் இரண்டு கோவில்கள், ஹரிஜனங்களுக்காகத் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

கெயிரா ஜில்லாவில் உள்ள மூன்று லோகல் போர்டுகள் தமது எல்லைக்குள் வெட்டப்பட்ட எல்லாக் கிணறுகளையும் ஹரிஜனங்களின் உபயோகத்துக்கு விட்டு விட்டதாகத் தீர்மானித்திருக்கின்றன.

பர்ஹாம்பூர் முனிசிபாலிட்டி எல்லா தண்ணீர்க் குழாய்களையும் தாழ்த்தப்பட்டவர்கள் உபயோகிக்கலாம் என்று தண்டோரா மூலம் அறிவித்திருக்கிறது.

கும்பகோணத்தில் சிறுவர்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாததற்காக 55 பேர்கள் பிராசிகூஷன் செய்யப்பட்டதில் அவர்கள் இனி அனுப்புவதாக உறுதி கூறியதின் பேரில் மார்ச்சு மாதம் 16 தேதி வரையில் 'காலம்' கொடுக்கப்பட்டிருக்கிறது.

பரோடா மகாராஜா காஷ்மீர் மகாராஜா போன்று அநேக வட இந்திய அரசர்கள் தங்கள் சமஸ்தானங்களிலுள்ள கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டனர். கபுர்த்தலா போன்ற அநேக சமஸ்தானங்கள் சீக்கிரத்தில் ஹரி ஜனங்களுக்கு கோயில்களைத் திறக்கப் போகின்றன. தென்னாட்டிலோ திருவாங்கூர் சமஸ்தானம் இது சம்பந்தமாக 'ஆராய்ச்சி' செய்து கொண்டிருக்கிறது. முடிவு என்ன வருமோ? இதர சமஸ்தானங்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அவை என்று விழிக்குமோ?

சோயாங் என்னுமிடத்தை சீனர்கள் விட்டு விட்டனர். லிங்குவான் என்னுமிடத்தில் இருதரப்பினருக்கும் பலமான யுத்தம் நடந்ததில் பலத்த ~~சேத~~ சேதமேற்பட்டிருக்கிறதாம். கைலுவையும், சோயாங்கையும் ஜப்பானியர் நாசமாக்கி விட்டனராம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane Madras.